
# 9 பாடங்கள்

## 16 வருட மீனவ களப்பணியிலிருந்து



dakshin

16 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் மீனவர்களுடன் இணைந்து கடல்சார் சூழல் அமைப்புகள் மற்றும் சமூகங்களின் சிக்கல்களைப் புரிந்துகொண்டு பணியாற்றி வருகிறோம். இந்தியாவில் மீனவம் அதன் பன்முகத்தன்மையைப் போலவே இன்றியமையாதது. எனினும், குறைந்து வரும் வளங்கள், சமமற்ற நிர்வாகம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பெரும் சவால்களை மீனவம் எதிர்கொண்டு வருகிறது.

நாங்கள் கற்றுக்கொண்டதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் விதமாக, 'Khane Ke Liye Bachao' பரப்புரையின் மெய்நிகர் சின்னமான எங்களின் மீன் மனிதன், களப்பணியிலிருந்து கண்டறிந்த 9 முக்கிய புரிதல்ககளை உங்களுக்காகக் கொண்டு வந்துள்ளார். கற்றறிந்த இந்தக் கருத்துகள், எங்கள் இணையத்தில் ஒரு வலைப்பதிவு கட்டுரையாகப் பகிரப்பட்டுள்ளது. இவை இந்தியாவின் மீனவம் மற்றும் கடல்சார் பகுதிகளுக்கு ஒரு நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது.

**அந்தக் கட்டுரையின் ஒரு சிறிய தொகுப்பு:**

**#1** மீனவத்தில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே மாதிரியான தீர்வு என்பது இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான தீர்வுகள் மற்றொரு இடத்திற்கு நேரடியாகப் பொருந்தாது என்றாலும், அதற்கான அடிப்படை உத்திகள் பெரும்பாலும் ஒத்திசைவாக அமையும்.





**#2** மீனவர்கள் மீன்வள மேலாண்மையில் முன்னணியில் இருப்பது அவசியம்! அவர்களை புறக்கணிப்பது, அவர்களின் விலைமதிப்பற்ற அறிவையும் திறன்களையும் ஒதுக்குவதுடன், நிலையான தீர்வுகளைக் கண்டறியும் வாய்ப்புகளையும் இழக்கச் செய்யும்.





**#3** மீனவர்கள் சூழல் ஆர்வலர்களை விட வேறுபட்ட முதன்மை இலக்குகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் இந்த வேறுபாடுகள் தான் உரையாடலுக்கான தொடக்கப் புள்ளிகளாக அமையப்பெறும்.





**#4** நிலைத்தன்மைக்குக் குற்றஞ்சாட்டுதல் அல்ல, கூட்டுழைப்பு தான் மிகவும் முக்கியம்! கடல் உணவு விநியோகச் சங்கிலியை கடலில் இருந்து தட்டு வரை நிலையானதாக மாற்றுவதற்கு மீனவர்கள் முதல் நுகர்வோர் வரை அனைவரும் பங்களிக்க வேண்டும். இதில் பொறுப்புணர்வு என்பது அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.





**#5** அறிவியல் தரவுகளுக்கு இணையானது உள்ளூர்/பாரம்பரிய சூழலியல் அறிவு (local/traditional). ஒரு சூழல் அமைப்பைத் தங்கள் வீடாகக் கருதுபவர்களே அதை மிகச் சிறப்பாகப் புரிந்துகொள்பவர்கள்.





**#6** மீன்பிடித் தொழிலின் மறைமுக முதுகெலும்பாகப் பெண்கள் உள்ளனர். ஆனாலும், அவர்கள் மானியங்கள், வளங்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் மட்டுப்படுத்தப்பட்டு ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொள்கின்றனர்.

அவர்களை முக்கியப் பங்குதாரர்களாக அங்கீகரிக்கும் சமத்துவமான கொள்கைகளை வடிவமைக்க, அவர்களின் பங்கேற்பை உறுதி செய்வது அவசியம்.





**#7** நீண்டகால நிலைத்தன்மைக்கு இளைஞர்களின் பங்கேற்பு மிகவும் இன்றியமையாதது. அவர்கள் உடனடிச் செயல்கள் மூலம், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை பின்பற்ற சமூகங்களை ஊக்குவிக்குகிறார்கள்.





**#8** வெறும் உத்தியோகபூர்வ அதிகாரத்தைக் கொண்டு மட்டும் வெற்றிகரமான சூழல் பாதுகாப்பு தலைமைத்துவம் சாத்தியமில்லை. சமூகங்களுக்கு அதிகாரமளித்து, அவர்கள் முன்னின்று வழிநடத்தும்போது, பாதுகாப்பு முயற்சிகள் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், கள யதார்த்தத்திற்கு நெருக்கமானதாகவும், மேலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளுக்கும் வழிவகுக்கும்.





**#9** நிலையான மீன்வள மேலாண்மைக்கு நீண்ட கால அர்ப்பணிப்பு மிக முக்கியமானது. இது, பங்கேற்பு மேலாண்மைக்கு அவசியமான நம்பிக்கையையும் வளமான கூட்டுழைப்பையும் கட்டமைக்க உதவுகிறது.



Khane ke liye bachao

## உணவை சுவைக்க
## வளங்களைப் பாதுகாப்போம்

## #KhaneKeLiyeBachao!


**ADDRESS**
2203, 8th Main Rd, MCECHS Layout, D Block, Sahakar Nagar, Bengaluru, Karnataka 560092

**PHONE**
+91 80 42113509

**EMAIL**
info@dakshin.org


dakshin